கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு
**2004/2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)**

# PS 1101 அரசறிவியலுக்கோர் அறிமுகம்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – **I** இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி – **II** இல் இரண்டு வினாக்களுக்கும் பகுதி – **III** இல் ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

01. லாஸ்வெல், கப்லன், மோகன்தோ, ரஸ்ஸல் போன்ற ஆய்வாளர்கள் அரசறிவியல் கல்விக்கு கொடுக்கும் விளக்கம் யாது?

02. யுனெஸ்கோவின் (Unesco) அனுசரணையுடன் சர்வதேச விஞ்ஞான சங்கம் அரசறிவியலின் பாடப்பரப்பாக வரையறை செய்த விடயங்கள் எவை?

03. அரசாங்கம் ஒன்றின் முக்கிய கடமைகள் எவை?

04. திட்டமிட்ட ஆய்வு ஒன்று உள்ளடக்கியிருக்க வேண்டிய விடயங்கள் எவை?

05. அரசறிவியலாளர்கள் அரசிற்கு விளக்கமளிக்கின்ற போது தாம் வாழ்ந்த காலம், சூழ்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே விளக்கமளித்துள்ளனர். பிலிமோர் (Philimore) என்பவர் அரசிற்கு கொடுத்த வரைவிலக்கம் யாது?

06. "இறைமை என்ற பதம் அரசறிவியலில் வெவ்வேறுபட்ட தன்மைகளில் பயன்படுத்தப்படுகின்றது." இதிலுள்ள முதன்மையான தன்மைகள் எவை?

07. ஜீன் போடினின் (Jean Boadin) இறைமையின் பிரயோகத்திற்கு விதிக்கும் கட்டுப்பாடுகள் எவை?

08. தாராண்மைவாதம் தொடர்பாக பயனுடைமைவாதியான பெந்தம் (Benthum) கூறும் விளக்கம் யாது?

09. Stephen leacock கூறும் அரசாங்க வகைப்பாடுகளுள் மக்களாட்சி அரசாங்க வகைப்பாடுகளின் உட்பிரிவுகளை கூறுக?

10. சமூக சுதந்திரத்தின் உட் பகுதிகளை எடுத்துக்கூறுக?

(30 புள்ளிகள்)

## பகுதி – II

01. (அ) அரசியல் விஞ்ஞானக் கற்கை நெறி எதனைக் கற்றுக் கொடுக்கின்றது? சுருக்கமாக விளக்குக.

(ஆ) அரசறிவியலை ஒரு விஞ்ஞானமாக அழைக்கலாமா? காரணம் கூறுக.

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) இரத்த உறவு
(ஆ) மதம்
(இ) பலம்
(ஈ) பொருளாதாரம்
(உ) அரசியல் உணர்வு

(20 புள்ளிகள்)

03. (அ) அரசு என்ற பதத்திற்கு விளக்கம் தருக?
(ஆ) அரசின் நவீன மூலக்கூறுகளைத் தெளிவுபடுத்துக?

(20 புள்ளிகள்)

## பகுதி – II

01. தாராண்மைவாதம் கூறும் கருத்துக்களை சமகால அரசுகளில் நடைமுறைப்படுத்தும்போது எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை இனம் கண்டு பகுப்பாய்வு செய்க?

(30 புள்ளிகள்)

02. “இறைமை முழு நிறைவானதும், நிச்சயமானதும், பிரிக்க முடியாததும், பாரதீனப்படுத்தப்பட முடியாததும், ஐக்கியமானதும், பிரதிநிதித்துவப்படுத்தப்பட முடியாததுமாகும்.” இக்கருத்தினை சமகால அரசுகளில் பிரயோகிக்க முடியுமா? ஆராய்க.

(30 புள்ளிகள்)